செ.வெ.எண்: 434 நாள்: 13.07.2020

**தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கொரோனா பிரிவில் வழங்கப்பட்டு வரும் உணவுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கொரோனா பிரிவில் வழங்கப்பட்டு வரும் உணவுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(13.07.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு காலை 06.30 மணிக்கு டீ, காலை 08.00 மணிக்கு மூன்று இட்லி, சாம்பார் மற்றும் கபசுரக் குடிநீர், காலை 10.00 மணிக்கு ரொட்டி, பால், இரண்டு வாழைப்பழங்கள், காலை 11.00 மணிக்கு கபசுரக் குடிநீர் அல்லது நெல்லிக்காய் ஜூஸ், கிரீன் டீ(ஏதேனும் ஒன்று), மதியம் 01.00 மணிக்கு மதிய சாப்பாடு, இரண்டு முட்டைகள், பொரியல், கீரை சாம்பார் மற்றும் மோர், மாலை 03.00 மணிக்கு கபசுர குடிநீர், மாலை 04.00 மணிக்கு டீ சுண்டல், ராகி கொழுக்கட்டை மற்றும் பச்சைப்பயிறு, இரவு 07.00 மணிக்கு கிச்சடி மற்றும் சப்பாத்தி ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுகள் குறித்து நேரில் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சமையலறையில் உணவு தயாரிக்கும் முறையினை நேரில் கேட்டறிந்து ஆய்வு செய்தார். கொரோனா நோயாளிகளுக்கு உணவுகள் வழங்கப்படும் வேளைகள், உணவு வழங்கப்படும் முறைகள் ஆகியவை குறித்து மருத்துவர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டறிந்தார். தொடர்ந்து, சமையல் பொருட்கள் வைப்பறையை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரிசி, பருப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு மற்றும் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து, கொரோனா வார்டில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு சுடுதண்ணீர் அவசியம் என்பதால், அவர்களுக்கு முதற்கட்டமாக 85 சுடுநீர் குடுவைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இவ்வாய்வின்போது மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர்(பொ) டாக்டர் மருததுரை மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.